
DUISBURG
20வது அகவை நிறைவு விழா
சிறப்பு மலர்
தமிழாலயம் டுயிஸ்பேர்க்
IZ
1992
2012
09-02-2013

# ஆசிரியர்கள்



திருமதி. க. இராம்மோகன், திருமதி. பே. சர்வானந்தன், திருமதி. பா. சண்முகராஜா,
திருமதி. த. தனபாலசிங்கம், செல்வன் சு. சிவபாலா, திருமதி. கோ. சொர்ணலிங்கம்,
திருமதி. வி. நந்தகுமார், திருமதி. ஜெ. பெ.இமானுவேல், திருமதி. பி. பகீரதன், திருமதி. ஜெ.ஜீவகன்
உதவி ஆசிரியர்கள்: செல்வி. அ. பெ.இமானுவேல், செல்வி. ஆ. பகீரதன், செல்வி. ம. விஜயகுமார்

# தமிழாலய மாணவர்களின் பெற்றோர்களில் ஒருபகுதியினர்



# தமிழாலய கீதம்

கல்வியும் கலையும்
நம்மிரு கண்கள்
நல்தமிழ் மொழி
எங்கள் உயிராகும்

பன்மொழிக் கல்வியும்
பல்கலை நுட்பமும்
பயிற்றுவிக்கும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

தன்மானத் தமிழர்
பண்பாடதனை
தரணியிற் பரப்பிடும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

பாலகர் நாங்கள்
பாடி ஆடி
படித்து மகிழும் ஆலயம்
எங்கள் தமிழாலயம்

பாவலர் போற்றிட
நாவலர் வாழ்த்திட
என்றென்றும் வாழிய தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்.

# நாம் கடந்த பாதையில்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பரந்து வாழும் யேர்மனியில் தமிழ்ச் சிறார்களின் தமிழ்மொழிக் கல்வியிலும், தமிழர் கலை கலாச்சாரங்களிலும் அக்கறை கொண்ட பெற்றோர்களினதும், தமிழ்ப்பற்றாளர்களினதும் முயற்சியின் பாதையில் பல நகரங்களில் தமிழாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பாதையின் வழியே டுயீஸ்பேர்க் நகரில் 18.02.1992ல் தமிழாலயம் அமைப்பதற்கான முதற் சந்திப்பு Internationales Zentrumல் 15ம் இல. அறையில் முன்னாள் கல்விக்கழகப் பொறுப்பாளரும், கல்வித் தந்தையுமாகிய திரு. இரா. நாகலிங்கம் ஐயா அவர்களால் நடாத்தப்பட்டது. இச்சந்திப்பின் வெற்றியினால் 09.05.1992ல் டுயீஸ்பேர்க் நகரில் தமிழாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நிர்வாகத்தில் திரு. விஜயகுமார் உதவி நிர்வாகியாகவும், நிர்வாகியாக திரு.க.மதிருபனும், 12 மாணவர்களுடனும், 3 ஆசிரியர்களாகிய திரு. து.நந்தகுமார், திருமதி. ச.பூங்குன்றன், திரு. சு.சந்திரசேகரம் ஆகியோரின் ஒருங்கமைப்பில் வளர்க்கப்பட்டது. 1993ல் நிர்வாகத்தில் விளையாட்டுப் பொறுப்பாளராக திரு.சிறிஸ்கந்தராஜா இணைந்து வளர்த்தனர். இப்படியாக வளர்ந்து கொண்டிருந்த தமிழாலயம் 1998ல் மீண்டுமொரு மாற்றத்தினால் நிதிப்பிரிவில் திருமதி.ஜெயராஜ் இணைந்துகொண்டார். இதேநேரம் பிரிவு சார்ந்த செயற்பாடுகளும் புதிதாக இணைக்கப்பட்டது. இதன் பின் தமிழாலயம் 2005ல் பாரிய மாற்றத்திற்குள்ளானது. திருமதி. கௌ.ஜெயராஜா நிர்வாகியாகவும், திருமதி. த.தனபாலசிங்கம் உதவிநிர்வாகியாகவும், திருமதி. ர.யோகரட்ணம் நிதிப்பொறுப்பாளராகவும் பணியாற்றினர். 2007ம் ஆண்டு திருமதி. கௌ. ஜெயராஜ் தனது பணியைத் தொடர்ந்து செய்யமுடியாத காரணத்தினால், உதவி நிர்வாகியாகப் பணியாற்றிய திருமதி.த.தனபாலசிங்கம் நிர்வாகியாகவும், உதவிநிர்வாகியாகவும், ஆசிரியராகவும் பணி ஏற்கவேண்டிய சூழநிலைக்குத் தள்ளப்பட்டார். நிர்வாகியாகவும், ஆசிரியராகவும், உதவிநிர்வாகியாகவும் தனியொருவராகப் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையில் பணியின் சுமை காரணமாக 2009ல் மீண்டுமொரு புதிய நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. அத்தெரிவில் நிர்வாகியாக திருமதி.பி.பகீரதன், உதவிநிர்வாகியாக திருமதி.த.தனபாலசிங்கம், நிதிப்பொறுப்பாளராக திருமதி.ஹே.மோகனகாந் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். 1992ல் ஆரம்பிக்கப்பட்ட இவ்விருட்சமானது இன்று மிக வளர்ந்து 85 மாணவர்களுடனும், 8 ஆசிரியர்களுடனும், 3 இளைய

உதவி ஆசிரியர்களுடனும் நிற்கின்றது. இத்தமிழாலயமென்னும் விருட்சமானது விளையாட்டு, கலை, தமிழ்த்திறன், பொதுத்தேர்வு எனப் பல கிளைகள் பரப்பி மிக உறுதியாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இவ்வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற சகல பெற்றோர் பிரதிநிதிகளுக்கும், துறைசார்ந்தபொறுப்பாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், இன்னும் உதவி செய்த, செய்யும் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு, இன்னும் வளர்ந்துவர உங்கள் ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

20வது அகவை நிறைவு விழாவிற்கும், விழா ஏற்பாட்டிற்கும் அனைத்து வகைகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் மனமுவந்த நன்றிகள்.

நன்றி
நிர்வாகக்குழு
டியூஸ்பேர்க் தமிழாலயம்



# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

# Tamilische Bildungsvereinigung e.V.

*Bildung, Kultur und Sport*



## உளம் உவந்து வாழ்த்துகிறோம்.

இன்று எங்கள் தாய்மண்படும் அல்லோலகல்லோலம் சொல்லி அடங்காது. ஈழத்தமிழினம் அங்கும், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் எமது எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்ற ஏக்கத்துடன் நிம்மதியிழந்த வாழ்வுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் கொடூரங்கள் ஒவ்வொரு தமிழன் மனதிலும் மிகப்பெரிய அழுத்தங்களை ஏற்படுத்திவிட்டநிலையில், அதன்பின்பு நடக்கும் அட்டூழியங்கள் அதைவிட பெரிய கவலையை உலகத்தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

இரண்டாந்தர வரிசையிலுள்ள தமிழர் இன்று நாலாந்தர வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அடிப்படைவசதிகளற்று, அங்கே பாராமுகமாக விடப்பட்டுள்ளனர். சிங்களக்குடியேற்றம், புத்தசிலைகளை நாட்டுதல், தமிழ்மக்களது நிலங்களை அபகரித்தல், கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், சிங்களமொழித்திணிப்பு என தமிழினத்தையே அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிநிற்கும் ஆட்சியாளர்களின் அதர்மமான செயற்பாடுகள் எனப்பற்பல கொடுமைகள் மத்தியில் இனமும், மொழியும், கல்வியும்கூட அழிந்து கொண்டிருக்கிறது. இந்தத் துன்பகரமான சூழ்நிலையில் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள தமிழர் நிலைப்பாட்டையும் சொல்லவேண்டியுள்ளது.

இந்த உலகநாடுகளுக்கு வந்தவர்கள் பாடுபட்டு, இரவுபகலாக உழைத்து, தமது வாழ்வை மேம்படுத்திய போதும் தமது தேசியம் சார்ந்த செயற்பாடுகளை மறந்துவிடவில்லை. எமது மொழி, சமயம், கலை, கலாச்சாரப்பண்பாட்டு விழுமியங்களையும் ஓரளவு காப்பாற்றிவருகின்றனர். ஓர் இனத்தின் அடையாளச்சின்னம் அவனாற்பேசப்படும் தாய்மொழியே. மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும். இதனால் புலம்பெயர்வாழ் தமிழர் இளைய சந்ததிக்கு தாய்மொழி கற்பித்தலின் அவசியம்பற்றி 1985ம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே யேர்மனிக்கு வந்ததமிழ் ஆர்வலர்களின் சிந்தனையின் வெளிப்பாடக சில தமிழ் கற்பிக்கும் பள்ளிகள்ஆரம்பிக்கப்பட்டன.

# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

# Tamilische Bildungsvereinigung e.V.

*Bildung, Kultur und Sport*

இப்பள்ளிகள் யேர்மனி உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியுடன் இணைக்கப்பட்டு 1990ல் தமிழாலயங்களாக பெயர் மாற்றம் பெற்று, யேர்மனியில்134 தமிழாலயங்கள் உருவாக்கப்பட்டு, இன்று 6500 மாணவமணிகளையும் 1000க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு ஆலாய் வேருன்றி, பல கிளைகள் பரப்பி தமிழர் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்கள் மிளிர மணம்பரப்பி யேர்மனி தமிழ்க் கல்விக்கழகம் என்ற பெயருடன் புலம்பெயர்நாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ்வதை அனைவரும் அறிவர்.

இந்த 134 தமிழாலயங்களில் ஒன்றாக டியூஸ்பேர்க் நகரிலே இனமொழிப்பற்றாளரான திரு.பொன்.விஜயகுமாரால் 09.05.1992ல் பன்னிரெண்டு மாணவர்களுடனும், மூன்று ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டதே டியூஸ்பேர்க் தமிழாலயம். அவரே உதவி நிர்வாகியாகவும், ஆசிரியராகவும் திறம்படப் பணியாற்றினார். பொன்.விஜயகுமாரின் ஆழுமைத்திறனையும், நிர்வாகப்பணி செய்யும் ஆர்வத்தையும் கண்ணுற்ற தமிழ்க் கல்விக்கழகப் பொறுப்பாளர் இவரை வடமத்திய மாநிலப் பொறுப்பாளராக நியமித்தார். இவரின் நிர்வாக காலத்திலும், பின் நிர்வாகப் பணியாற்றியவர்களான திருமதிகள்.கௌஜலா. ஜெயராஜ், தனலட்சுமி. தனபாலசிங்கம் ஆகியோர் காலத்திலும் நன்றே வளர்ந்து, இன்று திருமதி, பி.பகீரதன் காலத்தில் 87மாணவர்களுடனும், ஒன்பது ஆசிரியர்கள், மூன்று உதவிஆசிரியர்களுடனும் பெரு வளர்ச்சி கண்டுள்ளது. தமிழ், சுற்றாடல் ஆகிய பொதுத் தேர்வுகளிலும், தழிழ்த்திறன் போட்டிகளிலும் பங்குகொண்டு பரிசில்கள் பல பெற்றதுடன், உதைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள், நீச்சல் போன்ற போட்டிகளிலும் பங்குபற்றி வீரர், வீராங்கனைகளாகத் திகழ்கின்றனர். இத் தமிழாலய மாணவியொருவர் கடந்த பல வருடங்களாக பேச்சுப்போட்டியில் முதலாமிடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். இம்மாணவர்கள் திறமைகள் தமிழாலயத்துக்கே பெருமை சேர்த்துள்ளன. அத்தோடு நடனம், வயலின் போன்ற கலைவகுப்புக்களும் நடைபெறுவது பாராட்டுக்குரியதே.

இத்தமிழாலய வளர்ச்சிக்காக ஆரம்பம் முதல் இன்றுவரை உணர்வுடன் உழைத்து வந்த, வருகின்ற நிர்வாகிகள், ஆசிரியப்பெருமணிகள், பல்வகை ஒத்துழைப்பையும் நல்கிவரும் உணர்வுமிகு பெற்றோர்கள், பின்புலத்தில் நின்று உதவிக்கரம் நீட்டும் உறவுகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி அகவை இருபதை நிறைவு விழாவாகக்கொண்டாடும் தமிழாலயத்துக்கு எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி
இரா. நாகலிங்கம்
ஓய்வுபெற்ற தமிழ்க் கல்விக்கழகப் பொறுப்பாளர்
காகன், யேர்மனி.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி
Tamil Coordination Committee - Germany

15.01.2013

# தமிழர் ஒருங்கிணைப்பு குழு வாழ்த்து

ஓர் இனத்தின் அடையாளமாக திகழ்வது அதன் மொழியும், கலைபண்பாடும் ஆகும். அந்தவகையில் ஓர் இனத்தின் மொழி, கலை மற்றும் பண்பாடு அழிக்கப்படாமல் காக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து, புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் இனவேரைக் காக்க உருவாக்கப்பட்டதே தமிழ்க்கல்விக்கழகமாகும். அந்த வகையில் கடந்த இருபது வருடங்களாக டியூஸ்பேர்க் தமிழாலயம் பல தடைகளையும் போராட்டங்களையும் கடந்து மிக நேர்த்தியாக நடாத்தப்பட்டு வருகின்றது.

டியூஸ்பேர்க் தமிழாலயம், எமது சிறார்களின் தமிழறிவினை வளர்த்து, தமிழ்த்திறன் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும், கலந்து பல வெற்றிகளை ஈட்டியதோடு, விடுதலைக் கலைமேடைகளில் கலைநிகழ்வுகளையும் நிகழ்த்தி தமிழுணர்வினை ஊற்றிய சிறந்த தமிழாலயமாகும்.

இந்த உன்னதமான தமிழாலயத்தில் உருவாக்கப்பட்ட பலர் தமிழர் ஒருங்கிணைப்பு கட்டுமானங்களின் வளர்ச்சிக்கு தங்களின் இதயபூர்வமான பங்கை செலுத்தியுள்ளனர். இந்தவகையில் எதிர்கால சந்ததியினரும் சமூக நலன்சார்ந்த நபர்களாகவும், சமுதாயவிழிப்புணர்வுள்ளவர்களாகவும் வர வாழ்த்துகின்றோம். டியூஸ்பேர்க் தமிழாலயத்தின் இருபதாவது அகவை விழாவை வாழ்த்துவதில் யேர்மனி தமிழர் ஒருங்கிணைப்பு குழு பெருமை கொள்கிறது.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

நன்றி

# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

# Tamilische Bildungsvereinigung e.V.

Bildung, Kultur und Sport



நடுவச் செயலகம்
ஸ்ருந்காட், 09.02.2013

## 20 வது அகவை நிறைவில் மனம்நிறைந்த வாழ்த்துக்கள்

அன்புடையீர் !
வணக்கம்

மொழியும், கலையும், பண்பாடுமே ஒரு தேசிய இனத்தின் உயிர்ப்பைக்காட்டுகின்றன. தமிழ்மொழியின் தொன்மைக்கு நிகராக அதன் நிகழ்கால எதிர்கால வளர்ச்சி அமைய வேண்டும். தமிழன் எங்கு வாழ நேரினும் அங்கெல்லாம் தனது கலை, பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்கு உட்படுகின்றான். டியூஸ்பூர்க் நகரத்தின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒருங்கிணைந்து இப்பணியைத் திறம்படச் செய்ததன் சாட்சியமே உங்களின் இன்றைய 20 வது அகவை நிறைவு விழா. அந்த வகையில் உங்களுடன் இணைந்து நாங்களும் பெருமிதம் அடைகின்றோம்.

கிளைகளென நினைத்து முறித்து எறியப்பட்ட புலம் பெயர்ந்த யேர்மனி வாழ் தமிழர்கள் வேர்களாய் இறங்கி விளைந்து செழித்ததன் தகுதிச் சான்றே யேர்மனியின் தமிழாலயங்கள். உங்களின் பிள்ளைகள் மொழியாலும், பண்பாடுகளாலும் இரட்டிப்புச் சுமைகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். இருப்பினும் அவர்கள் தமக்குக்கிடைக்கும் ஓய்வு நேரங்களின் பெரும்பகுதியைத் தாய்மொழிக் கல்விக்காகவும் தமிழ்க் கலைக்காகவும் செலவிடுகின்றார். அவர்களின் இந்த முயற்சிகள் வயதை மீறிய சுமைகளாக அமைந்தாலும் தாம் வாழும் சமூகத்தில் ஏனைய மாணவர்களைவிட ஏதோ ஒரு வகையில் தம்மை முதன்மையாகக் காண்பித்து நிற்பதையும் காண்கின்றோம். தமிழ்ப் பண்பாடுகளைத் தமது பிள்ளைகளுக்கு தகுந்த காலத்தில் கைமாற்றுச் செய்வதில் தமிழாலயங்களின் பெற்றோர்கள் பல சிரமங்களையும் செலவீனங்களையும் சந்திக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரு சவாலாக ஏற்றுச் செயற்படுகின்றார்கள். பண்பட்ட நிலத்துப் பயிர் செழித்தோங்கும் என்பது பொய்யாமொழி. அந்த அடிப்படையில் டியூஸ்பூர்க் நகரின் தமிழ்ச் சமூகம் ஒரு தலைசிறந்த உதாரணமாக அமைகின்றது.

கடந்த 23 ஆண்டுகளில் யேர்மனியில் தமிழர் வாழும் பகுதிகளில் ஆங்காங்கே 130 க்கு மேற்பட்ட தமிழாலயங்களை அமைத்து 6000 க்கும் அதிகமான தமிழ்ச்சிறார்களுக்குத் தமிழ் மொழியையும் கலைகளையும் கற்பித்துவரும் எமக்கு டியூஸ்பூர்க் நகரில் வாழும் தமிழர்களின் அடுத்த சந்ததியினர் தமிழையும் கலைகளையும் மறந்து விடுவார்களோ என்ற அச்சம் முன்பு இருந்தது உண்மையே. ஆனால் இன்று அந்த அச்சம் தவிர்ந்து மகிழ்கின்றோம். அதற்கு உங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒருங்கிணைந்த உயர்ந்த பணியே பொறுப்பு. நாம் என்ன சேவை செய்கின்றோம் என்று புரிந்துகொண்டு அதை ஒழுங்காகச் செய்தாலே போதும். எல்லாம் நன்றாக அமையுமென்று கூறி டியூஸ்பூர்க் தமிழாலயம் எமது இலக்கை மேலும் சிறப்பாக வளர்க்கவேண்டுமென இந்த இனியநாளில் மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

கல்வியும் கலையும் நம்மிருகண்கள் நல்தமிழ்மொழி எங்கள் உயிராகும்

நன்றி

செ.லோகன்.
பொறுப்பாளர்

# தமிழ்க் கல்விக் கழகம் யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

# Tamilische Bildungsvereinigung e.V.

Bildung, Kultur und Sport

அகவை இருபதிலே விழாக்காணும்
டுயூஸ்பேர்க் தமிழாலயமே நீ வாழ்க!

தாய்நாட்டின் சீரற்ற சூழ்நிலை காரணமாக புலம்பெயர்ந்து, இங்கு வந்து வாழ்ந்தாலும் நாம் யார்? என்பதனை மறத்தல் கூடாது. நாம் எதனையும் செய்யலாம் என்பதனைவிடுத்து எம் மொழியும்,பண்பாடும் நிலைக்க இதைத்தான் செய்யவேண்டும் என்று நினைத்து வாழவேண்டும். இவற்றை மறந்தால் நாம் நாமாக இருக்கமுடியாது.

வாழிடமொழி, கலாச்சார நிலைமைகள் எம்மைத் தட்டிப்பார்த்து தம்பக்கம் இழுத்துவிட நிற்கும் இன்றைய நிலையில், குறிப்பாக எம் இளைய சந்ததியினரை அதனுள் முற்றாக மூழ்கிவிடாமல் பாதுகாப்பது எமது ஒவ்வொருவரினதும் கட்டாயத் தேவையாகும். இத்தேவையினை நிறைவேற்றி எம் இனத்தின் தனித்துவத்தினைக் கட்டிக்காத்து வருபவைதான் தமிழ்க் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் தமிழாலயங்கள் என்று சொல்வதில் நாம் அனைவரும் பெருமையடைய வேண்டும்.

இந்நிலையில் 1992ஆம் ஆண்டளவில் பிறப்பெடுத்த டுயூஸ்பேர்க் தமிழாலயமானது, இன்று பெருவளர்ச்சி பெற்று எண்பத்தியேழு மாணவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் பல்லறிவு தரும் தமிழ் நூலகத்தையும் வைத்திருப்பதென்பது இத்தமிழாலயத்தின் தனிச் சிறப்பாகும். எம் இளஞ்சந்ததியினருக்கு தாய்மொழியாகிய தமிழையும், தமிழ்ப்பண்பாட்டினையும் அடையாளமிட்டுக் காட்டி, இம் மாணவச்செல்வங்களை நல்வழியில் வழிநடத்திச் செல்கின்றது. வாழிடத்தின் இயந்திர வாழ்க்கைமுறையில் கல்விப்பணிக்கென நேரத்தினை ஒதுக்கி பணிபுரிந்துவரும் நிர்வாகி, உதவி நிர்வாகி, ஆசிரியர்கள், மற்றும் துறைசார்ந்த செயற்பாட்டாளர்கள் அனைவர்க்கும் நன்றியுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன்; இத்தமிழாலய வளர்ச்சிக்கு உதவிக்கரம் கொடுத்துவரும் பெற்றோர்க்கும், தமிழாலயத்திற்கு பெருமை சேர்க்கும் மாணவர்க்கும், பழைய மாணவர்க்கும் நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க டுயூஸ்பேர்க் தமிழாலயம்,
வளர்க உன் தமிழ்ப்பணி!

தமிழ்க் கல்விக் கழக மாநிலச் செயற்பாட்டாளர்
தா.நற்குணராசா



# அகவை இருபதில்!

# விழுதொன்று விருட்சமாகிறது...

டியூஸ்பேர்க் நகர்தனிலே வீழ்ந்திட்ட விதையே அதை
விதைத்திட்ட கவியே நீ வளர்ந்திட்ட வனப்பில் உளம்
மகிழ்ந்திட்ட விழியே கழிக்கின்ற மனமே கமழ்கின்ற மணமே
திகழ்கின்ற அறிவே தித்திக்கும் தமிழே வணக்கம்-அதை
மொழிகின்ற ஆலயம் மிளிர்கின்ற காரணம் கேள்-அது
வெளிவந்த காரணம் தேன் இன்று வழிகின்றதேன் -மொழி
குளிர்கின்ற யாழ் வன்னி குறைகின்ற ஊர்! விழி வழிகின்றநீர்
தெளிகின்றதா? மனம் தெளிகின்றதா? பழிவந்த திசைநோக்கி..
விழிசெல்லுமோ வழிசொல்லுமோ பழியென்னதெழிவென்ன
வழிவெல்க மொழிவெல்க வாவென்று அழைக்கின்றதோ வாழ்க!
இவ்வாலயம் பல்லாண்டு. வாழ்க!வாழ்க!

சைவமும் தமிழும் தளைத்தோங்கிய ஈழத்தில் தமிழர்கள் சுதந்திரமாக வாழமுடியாத சூழலில் அநேகமான தமிழர்கள் புலம் பெயர்ந்தனர் இப்புலப்பெயர்வானது 1985 களில் குறிப்பாக யேர்மனியில் அதிகமான தமிழர்கள் அரசியற் தஞ்சம் கோரினர் யேர்மனியின் மத்தியமாநிலத்தில் அதிக தமிழர்கள் குடும்பத்தினராகவும் தனியாகவும் வந்து காலப்போக்கில் குடும்பங்களாக மாற்றம் பெற்றுத் தமிழர்களின் புதிய தலைமுறைகள் புலம் பெயர்ந்த நாடுகளில் உருவாகினர் இந்த நிலையில் எமது எதிர்காலச் சந்ததிகள் நம் தாய்மொழியாம் தமிழ்மொழிக் கல்வியைக்

கற்றுக்கொள்ளவேண்டும் என்ற உயரியநோக்கில் சிலநகரங்களில் தமிழ்ப் பாடசாலைகள் பொது நிறுவனங்களின் உதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டன.

தனித்தனியாக இயங்கிவந்த பாடசாலைகள் 1990ம் ஆண்டு தமிழாலயம் என்றபெயரில் யூச்சன் என்ற நகரில் ஆரம்பிக்கப்பட்டு உலகத்தமிழர்

இயக்கத்தின் கீழ் கல்விப்பணியாகத் துளிர்விடவும் அதன் பொறுப்பாளராக உயர்திரு ஆசிரியர் இரா.நாகலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டதன் காரணத்தால் அவர்தம் முகச்செழிப்பால் அநேகமான நகரத்து முன்னோடிகளும் அவரோடு கைகோர்த்து தத்தம் நகரங்களில் தமிழாலயங்களை உருவாக்கினர் அந்த வகையிலே எங்கள் வாழ்விட நகராம் டுயூஸ்பேர்க் நகரிலும் தமிழாலயத்தை ஆரம்பித்து வைத்தோம் அன்றைய காலத்தில் நானும் திரு.சுப்ரமணியம் சந்திரசேகரம் அவர்களும் நிர்வாகப்பணியில் பணியாற்றத்தயாராக இருந்தோம் என்பதை விட இந்த நகரமக்கள் எம் இருவர் மீதும் அத்தகைய நம்பிக்கை வைத்திருந்தனர் ஆனாலும் எனக்கும் திரு.சுப்ரமணியம் சந்திரசேகரம் அவர்களுக்கும் நிர்வாகம் என்பதை விட ஆசிரியப்பணியே அனுபவம் மிக்க விரும்பத்தக்க பணியாக இருந்தது. இந்தக்காரணத்தால் திரு.கனகநாயகம் மதிருபன் அவர்கள் தானாகவே நிர்வாகத்தில் இணைவதற்கு முன்வந்ததால் அவரே நிர்வாகியாக நியமனம் பெற்றார். ஆறுமாதங்கள் பணிபுரிந்த பின் உதவிநிர்வாகியாகப்பணிபுரிந்தார் 01.01.1993ம் ஆண்டிலிருந்து 31.12.2004 வரை நானே நிர்வாகியாகப் பணியாற்றினேன்.

இந்தக் காலகட்டத்தில் பல இளைஞர்களை நிர்வாகத்துக்குள் உள்வாங்க வேண்டும் என்ற நோக்கில் புதியவரலாறுகளைப் படைத்தோம் பலதடவைகள் பலவிழாக்களை முன்னெடுத்தோம் தமிழத்திறன் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்றுபல சாதனைகளைப்படைத்தோம். காலத்துக்குக் காலம் எல்லாவற்றுக்கும் உறுதுணையாக நின்றவர்கள் பெற்றோர்கள்

முதலாவது ஆண்டு விழாவிலே டியூஸ்பேர்க் தமிழாலயத்தின் சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்றவர் செல்வன் *சீத்தாராம் சந்திரசேகரம்* அவர்கள்.

தொடர்ச்சியாக இரண்டாம், மூன்றாம், ஐந்தாம், ஏழாம், பத்தாம் ஆண்டுவிழாக்களையும் கொண்டாடினோம். ஏழாவது ஆண்டுவிழாவின் நாடகம் பலராலும் வரவேற்கப்பட்டு உலகத் தமிழர் இயக்கக் கல்விப்பணியின் ஒன்பதாவது ஆண்டுவிழாவில் இரண்டாவது தடவை மேடையேற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1999ம் ஆண்டு ஏழாவது ஆண்டு விழாவுக்கு வருகைதந்த தமிழாலயத்தந்தை உயர்திரு இரா.நாகலிங்கம் அவர்களால் ஈழமுரசுப்பத்திரிகையில் வெளிவந்தமாணவர்கள் முன் நின்று நடாத்திய „தமிழாலய விழா“ என்ற தொகுப்புக் கட்டுரை இளைஞர்களை முன்நிலைப்படுத்திய முதன்மைத் தமிழாலயம் என்ற பெருமையைப் பெற்றது. அன்றைய விழாவிலே ஆசிரியர்கள் நிர்வாகிகள் யாவரும் பரிசு கொடுப்பதும் பாராட்டுவதுமாகத் தான் இருந்தோமே தவிர வரவேற்புரையிலிருந்து தொகுப்புரை நன்றியுரை வரை மாணவர்களுக்கே சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இங்கே நிர்வாகக்கட்டமைப்புக்கள் விதைக்கப்பட்டன. அதுமட்டுமன்றி முதல் முதலாக தமிழாலயங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட அணி உருவாக்கம் பெற்றபோது பன்னிரண்டு விளையாட்டு வீரர்களை மட்டும் உள்ளடக்கி ஏறத்தாழ முப்பது தமிழாலயங்கள் கலந்து கொண்டபோதிலும் யேர்மன் ரீதியிலான இறுதிப்போட்டிகளில் முறையே 1998, 1999களில் இரண்டாவது இடங்களையும், 2000ஆம் ஆண்டில் பதினைந்து வயதுக்கு உட்பட்ட அணிமுதலாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது. மேலும் 2002ம் ஆண்டு சிறந்த மாணவன் என்ற பாராட்டைப் பெற்றவர் *செல்வன் இராஜாராம் சந்திரசேகரம்* அவர்கள் அதற்கும்

மேலாக 2003ம் ஆண்டு டியுஸ்பேர்க் தமிழாலயத்தின் பிரதி நிர்வாகியாக *செல்வன் கோபிநாத் தனபாலசிங்கம்* அவர்கள். தெரிவுசெய்யப்பட்டார்.

எனது காலத்துக்குப்பின் அதாவது நிர்வாகத்திலிருந்து விலகியபின் புதிதாகச் செயற்பட்ட *திருமதி.கெளஜலா.யெயராஜ்* அவர்கள் இந்த நிர்வாகத்தை நான் வியக்கும் அளவுக்கு நிர்வகித்தார் அதைவிட அன்றையகாலத்தில் உதவி நிர்வாகியாகப் பணிபுரிந்த *திருமதி.தனலக்சுமி தனபாலசிங்கம்* அவர்கள் நிர்வாகி இல்லாமலே இரண்டு வருடங்கள் நிர்வகித்தவர் தற்பொழுது நிர்வாகியாகப் பணிபுரியும் *திருமதி பிரபா.பகீரதனும்* அப்படித்தான். இதனாலேதான் இந்த நகரத்தில் வாழ்ந்த வாழ்கின்ற மாணவர்களில் 98 வீதமானவர்கள் தமிழாலயத்தில் கல்வி கற்றார்கள், கற்கின்றார்கள், கற்பார்கள் இத்தரவு ஒன்றே போதும் இந்தத் தமிழாலயத்தை வாழ்த்துவதற்கு. தமிழ் உள்ள மட்டும் வரலாறு சொல்லும் தமிழ்மானம் வெல்லும் „விதைத்தவை முளைத்தன முளைத்தவை விளைந்தன இன்று அறுவடை நாள்....***அகவை இருபது!***

'சூரியச் சுடரைச் சூடம் சுட்டெரிக்காது காணீர்
கூரிய அறிவுக் கூடம் கொண்ட நற்பணியினூடே
வீரிய வேட்கைகொண்டே வெற்றிடம் ஒன்று தந்தேன்
பேரிய உள்ளத்தோடே பேரடி தொழுவாய் நெஞ்சே!

வாழ்க தமிழ் வளர்க தமிழாலயம்.

நன்றியுடன்

முன்னாள்

நிர்வாகி, ஆசிரியர் தமிழாலயம் டியூஸ்பேர்க்

மாநிலக் கலைப்பிரிவுப் பொறுப்பாளர் உலகத்தமிழர் இயக்கம்

மாநிலச் செயற்பாட்டாளர் தமிழ்க் கல்விக்கழகம்.



TAMIL YOUTH ORGANISATION
தமிழ் இளையோர் அமைப்பு
GERMANY - யேர்மனி

20.01.2013

கல்தோன்றா மண்தோன்றா மூத்த மொழியாம் தமிழ்மொழியின் புதல்வர்கள் நாம் என்று எண்ணுகையில் தமிழராகிய எமக்கு பெருமையும் மகிழ்வும் உண்டாகுகின்றது. அந்த தாய்மொழியை கற்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் உரிமையுமாகும்.

அந்த வகையில் தேசம் இழந்து புலம்பெயர்ந்து வந்த எம் இனத்தின் அடுத்த தலைமுறை மொழி, கலாச்சாரம், பண்பாடு இழந்து ஏதிலியாய் வாழ்வதை தவிர்க்க தமிழாலயமாக Duisburg நகரில் வந்து உதிர்த்தாய் தமிழ் ஊட்டுவதற்காக.

ஆர்வத்துடன் தமிழ் கற்கும் மாணவச் செல்வங்களையும் அன்பால் அரவணைத்து அவர்களுக்கு தமிழ் ஊட்டி, தேசப்பற்றூட்டி வளர்க்கின்ற தூயபணியாற்றும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் நிர்வாகத்தையும் இவ் 20வது அகவையில் யேர்மனி தமிழ் இளையோர் அமைப்பு மனப்பூர்வமாக வாழ்த்துகின்றது.


இன்றைய காலகட்டத்தில் மேற்குலகமே தமிழினத்தின் மேல் கட்டவிழ்க்கப்பட்ட இனப்படுகொலையை கண்டிக்கும் வேளையில், அந்த இனத்தைச் சேர்ந்த இளையோராகிய நாம் இனப்படுகொலையை மேற்கொண்டவர்களை சர்வதேச சட்டத்தின் முன்நிறுத்தி அவர்களுக்கான தகுந்த தண்டனையை பெற்றுக்கொடுப்பதோடு எம் இனத்தின் விடுதலையை வென்றெடுக்கும் பெரும் பங்கு இளையோராகிய எம்மையே சாரும்.

நாம் பல மொழிகளைக் கற்றாலும் எமது தாய்மொழியும் தாய்நாடும் நம்மிரு கண்களாக எமக்கு திகழவேண்டும். அதற்கமைய புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய தலைமுறையினர் தமிழிலும் கல்வியிலும் சிறந்தவர்களாகவும் தேசப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்றுடையவர்களாகவும் திகழ்ந்து, நாளை மலரும் சுதந்திர தாய்நாட்டை கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழீழம்!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!

நன்றி.





# வாழ்த்துரை

நாடு கடந்து நான் வாழ்ந்தாலும்
பழையனவற்றை மறந்திடவில்லை
எனக்கும் தமிழ் மீது ஆர்வத்தை
ஏற்படுத்திய நியூஸ்பேர்க் தமிழாலயம்
வாழ்க! பல்லாண்டு.
இளைய தலைமுறைக்கு இருபது
ஆண்டுகளாக தாய்மொழியாம் எமது
தமிழ் மொழியை ஊட்டும்
நியூஸ்பேர்க் தமிழாலயம் வாழ்க உன்பணி
இன்னும் பல ஆண்டுகள் செவ்வனே இயங்க
நிர்வாகி, உதவி நிர்வாகி, ஆசிரியர்கள்
மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும்
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றியுடன்
கௌஷல்யா ஜெயராஜ்





20 Jahre tamilische Samstagsschule in Duisburg

Es ist schon etwas besonderes: Seit 20 Jahren findet immer samstags im Internationalen Zentrum der Volkshochschule Tamilisch-Unterricht statt. Tamilisch ist eine alte Sprache und Schrift, die in einem Teil Sri-Lankas und in Südindien gesprochen und geschrieben wird.

Die Schüler sind alle waschechte Rhein-Ruhr-Kinder aus Duisburg und Umgebung. Sie besuchen den Unterricht zusätzlich zur normalen Schule. Ihre Eltern flüchteten damals vor dem Bürgerkrieg in Sri Lanka und haben hier eine neue Heimat gefunden. Die meisten sind inzwischen deutsche Bürger geworden. Trotzdem ist ihnen wichtig, die Sprache und Kultur der alten Heimat an die Kinder weiter zu geben.

Die Tamilische Bildungsvereinigung e.V. mit Sitz in Stuttgart ist das organisatorische Dach der inzwischen mehr als 130 tamilischen Freizeit-Schulen in Deutschland. Duisburg zählt zu den Ältesten.

Vielen Dank an alle, die in den 20 Jahren in der tamilische Samstagsschule aktiv waren und sind: An die Gründer, die Lehrerinnen und Lehrer, die Eltern und die Schülerinnen und Schüler, die mit Tamilisch ein Plus erwerben, auf das sie stolz sein können.

Wolfgang Esch
Leiter des Internatonalen Zentrums der Volkshochschule

Duisburg, im Juli 2012



# வேரை வாழ்த்தும் வித்துக்கள்

நினைத்துப் பார்க்கிறோம்! போரில் மூழ்கி வேரறுந்து
புலத்தில் ஊன்றிய போது
உணர்வேற்றி கலையேற்றி தமிழேற்றி
உயிர்ப்புத்தந்த தமிழாலயம்
டியூஸ்பேர்க் தமிழாலயம்.

இங்கிருந்து விதையாய் பரவிய மாணவர்கள்
தமிழ்ப்பற்றோடும் மண் உணர்வோடும் விடுதலை உணர்வோடும்
முறுக்கேறிய மாணவர்களாக மிளிர்ந்தார்கள்.
மெய்வல்லுனர் போட்டிகளின் ஒருங்கமைப்பாளர்களாக
வீரியமாய் செயற்பட்ட நீதிமான்களாய்.........
சுனாமியால் ஏற்பட்ட துன்பச் சுழியில் வாழ்ந்த மக்களின்
ஆதரவுக் கரங்களாய்......
இனவிடுதலைக் கொடுமைகளால் அல்லலுற்ற இனத்தின்
உரிமைக் குரலின்விம்பமாய்......
புலம் வாழ்தமிழர்களின் கல்விமேம்பாட்டிற்கான
ஊக்குவிப்புக் கரங்களாய்.......
இளையோரின் திறமைகளை திறன்பட திரட்ட
இளையோர் வழிகாட்டிகளாய்........
தாய் மண்ணின் தேவைகள் உணர்ந்து
மண்ணுக்கு சேவகனாய்......
வித்துகளின் கனம்
தமிழர்கள் மரமாய் பரவியது.

பூத்துக் குலுங்கும் புதிய பூக்களின் வாசம் பரவி வீசி
நல்வித்துக்களாக பெருகிப்பரவ வாழ்த்துகிறோம்.
நாங்கள் செய்தவை சாதனைகள் அல்ல முயற்சிகளே.
நீங்கள் சரித்திரம் படையுங்கள்
கவிதைக்கு தலைப்பு சூட்டியுள்ளோம்
முற்றுப்புள்ளி நீங்கள் வைக்கமாட்டீர்களா?

நன்றி!

வேரை வாழ்த்தும் வித்துக்கள்
பழைய மாணவர்கள் பெருமை கொள்கிறோம்.



# தமிழாலயம் டுயூஸ்பேர்க்

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு

# Tamilalayam Duisburg

*Bildung, Kultur und Sport*



ஜேர்மனி டுயூஸ்பேர்க் தமிழாலயம்

## போற்றுதலில் புளகாங்கிதமே

தாய்மொழித் தாகங்களை, தரங்களைத்தரணியில்
தக்கிடத் தலையெடுத்த தமிழ்க்கல்விக்கழகம் - இதால்
மெய்ப்படவே விளைந்தவைதமிழாலயங்கள் - ஆம்
இதில்ஒன்றென உயர்ந்து உன்னதம் அடைந்தது
கல்வித்தானத்தால் டுயூஸ்பேர்க் தமிழாலயம் நற்பயன் நாட்டியது !!

டுயூஸ்பேர்க் தமிழாலயம் இருபது அகவைகளை
அழகாக அண்மித்தது இன்றைய மகத்துவம்
பெருமையுடன் பேறு கண்டு நிறைவெனவே நிமிர்கிறது !
பதினொரு ஆண்டு, யான் கற்பித்தலில் கண்ணுற்றது
அதிசிறந்த மூன்று நிர்வாக நிறை முனைப்போடும் - ஆசிரிய
சீரிய பணியின் விதைப்பும் மாணவ விளைச்சலுமே !!

மாநிலங்கள் முன்னெடுக்கும் கல்விசார் காரியங்களை
கடமையெனத் தன்னகமாக்கி தமிழர் பண்பாடுகளை
தத்துத்தந்த பெற்றோரும், மாணவமும் ஒன்றிணைந்து
அகலவிரிந்து முத்தமிழ் வளர்த்திட முனைகவே !
போற்றி நின் புனித சேவைகள்! ஆற்றலருள் நின் பணிகள் !!
போற்றுதலில் புளகாங்கிதம் பெற்றோம் !
வாழ்த்துதலில் வாய்மை சேர்ப்போம் !!

---

-கோசல்யா சொர்ணலிங்கம் -

(கவிதாஞானவாரிதி )

(முல்கைம் , ஓபகௌசன், டுயூஸ்பேர்க், தமிழாலய ஆசிரியை)

# தமிழாலயம் டுயூஸ்பேர்க்

தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு

# Tamilalayam Duisburg

*Bildung, Kultur und Sport*



தாயக விடிவிற்காக உயிர் நீத்த மாவீரர்களையும், பொதுமக்களையும் முதலில் நினைவுகூறி அள்ளிச்சொரியும் தமிழ் மொழியை தந்த டுயூஸ்பேர்க் தமிழாலயத்துக்கும் என் வணக்கங்கள்.

இத்தருணத்தில் டுயூஸ்பேர்க் தமிழாலயத்தின் புத்தகத்தில் எழுதும் சந்தர்ப்பம் அளித்தமைக்கு எனது நன்றிகள். நான் யேர்மன் நாட்டில் பிறந்திருந்தாலும் தமிழ் மொழியில் எப்பொழுதும் ஆர்வம் இருந்தது. வீட்டிலும் பெற்றோருடன் தமிழ்மொழியில் தான் உரையாடுவதால் தமிழ் கற்பதில் சிரமம் இருக்கவில்லை. கல்வியும் கலையும் நம்மிரு கண்கள் என்ற தமிழாலயகீதத்துடன் ஆரம்பித்த எனது கல்வி, இன்று தமிழ்மொழியிலும் யேர்மன்மொழியிலும் உயர்நிலைபள்ளிவரை சித்தியடைந்ததை நினைத்து பெருமை அடைகின்றேன். குறிப்பாக நான் சொல்வதென்றால் ஐந்து வருடங்களுக்கும் மேலாக எனக்கு கற்பித்த ஆசிரியை கோசலியா சொர்ணலிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகள். அவரின் அறிவுரையும் ஊக்கமும் தான் என்னை உயர்நிலை வரை சித்தியடைய வைத்தது என்பதை பெருமையுடன் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

யேர்மன் பாடசாலைப் படிப்புகள் இருந்திருந்தாலும் என்னைப் போன்று பல மாணவர்கள் தமிழ்மொழியை மறந்துவிடாது இரண்டு படிப்புகளையும் தொடர்ந்தார்கள். பல சிரமங்களின் மத்தியிலும் கூட யேர்மன் மற்றும் தமிழ் மொழியில் தங்களது உயர்கல்விப்படிப்பை முடித்தார்கள். படிப்பிற்கு அப்பால் டுயூஸ்பேர்க் தமிழாலயம் கலைவகுப்புகளில் பங்கேற்கும் சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்கியது. மாணவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இசைக்கருவி, பரதநாட்டிய மற்றும் சங்கீத வகுப்புகளில் பங்கேற்றனர். வருடாவருடம் தமிழ் கல்வி கழகத்தால் நடாத்தப்படும் தமிழ் திறன் போட்டியிலும் டுயூஸ்பேர்க் தமிழாலயம் முன்னிலை வகிக்கின்றது. தமிழாலய மாணவர்கள் அனைத்து போட்டிகளிலும் முன்னேறி பல பரிசுகளையும் வென்று தமிழாலயத்திற்கு பெருமை சேர்க்கின்றனர். மேலும் இன்றைய காலகட்டத்தில் தமிழீழ சூழலைக் கருத்திற்கொண்டு எமது தாய்மொழியாம் தமிழ்மொழியை கற்கும் கடமைப்பாடு ஒவ்வொரு தமிழ் மாணவனுக்கும் உண்டு. 50 அல்லது 100 வருடங்கள் கடந்தாலும் தமிழன் என்னும் அடையாளம் எம்முடன் இருந்து கொண்டே தான் இருக்கும். மேலும் பல்வேறு துறைகளில் எம்மை வளர்த்துக்கொண்டு நாட்டுக்கான பங்களிப்பையும் மறந்துவிடக்கூடாது.

நானும் தாயகத்திற்கு உதவும் நோக்கில் படிப்பேன் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை. தமிழீழம் என்ற தனிநாட்டை வென்றெடுக்கும் பாதையில் எனது பங்களிப்பு இருந்துகொண்டே இருக்கும். இப்பாதையில் தாய்மொழியாம் தமிழ்மொழியை கற்பது மிகவும் முக்கியம். புலம்பெயர் நாட்டில் இதற்கான பங்களிப்பை ஆற்றிவரும் தமிழ்க் கல்விக் கழகத்திற்கும், குறிப்பாக நான் கற்றுத் தேர்ந்த டுயூஸ்பேர்க் தமிழாலயத்திற்கு எனது நன்றிகள். மேலும் அவர்களின் பணி தொடர மற்றும் தமிழ்மொழியை அடுத்து வரும் சந்ததியினருக்கு எடுத்துச்செல்லும் பணியில் நானும், ஒரு பழையமாணவனாக, உறுதுணையாக இருப்பேன் என்பதில் ஐயமில்லை.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

சுவீட்சன் சிவபாலா

20 வயதிற்கு மேற்பட்டோர்



சிவதுஜன் நடராஜா, சுவீட்சன் சிவபாலா, தர்சன் துரைசிங்கம், மிதுசன் சிவபாலா, சர்மிலன் சாந்தகுமாரன், நிரோஜன் முருகையா, சபிசன் சாந்தகுமாரன், ரொபிஷன் ரூபகாந்தன், வினுசியன் மகேந்திரராஜா.

10 வயதிற்கு உட்பட்டோர்



பாரத் விஜயசேகரன், அபிஷேக் நந்தகுமார், ரொஸ்வின் ரமேஸ், நிதுர்சன் சிறீஸ்கந்தராஜா, சிபின் ரமேஸ், நிதுஸ் மகேஸ்வரன், அபிஷன் தயாபரன், டினோத் பிராங்கிலின், டானியல் பெ.இமானுவேல், இந்துஜன் சுப்ரமணியம், கேதுசன் கருணானந்தன், மிதுன் மோகனகாந்.

13-15 வயது



டிலான் பெ. இமானுவேல், கௌசிகன் சிவகுமாரன், சோபிதன் சிறீஸ்கந்தராஜா, டனுசன் இராம்மோகன், ஜெனுஜன் சின்னத்தம்பி, நிகேஸ் மகேஸ்வரன், வினோஸ் நந்தகுமார், கிஷோக் தேவதாசன்.

# உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி 2012





வணக்கம். எனது பெயர் அபிராமி தனபாலசிங்கம். நான் நியூஸ் பேர்க் தமிழாலயத்தில் ஆண்டு 11 வரை தமிழ்மொழி, மற்றும் சமூகக்கல்வி கற்று நிறைவு செய்தேன். அதன்பின் மூன்று ஆண்டுகள் நியூஸ்பேர்க் தமிழாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றி உள்ளேன். எனக்கு இத்தனை ஆண்டுகளில் நியூஸ்பேர்க் தமிழா லயத்தில் கிடைத்துள்ள அனுபவங்கள் பற்றி இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

நான் எனது மூன்றாவது வயதிலிருந்தே எனது தாயாரிடம் தமிழ் கற்று வந்தேன். பின் 1997இல் நியூஸ்பேர்க் தமிழால யத்திற் சேர்ந்தேன். அங்கு அன்றைய நிர்வாகியான திரு பொன். விஜயகுமார் அவர்கள் எனது தகுதியைப் பார்த்து என்னை நேரடியாக இரண்டாம் ஆண்டிற்கு அனுமதித்தார். நான் எப்பொழுதும் தாய்மொழியாம் தமிழ்மொழியை மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கற்று வந்தேன். இதன் வெளிப்பாடாக நான் தமிழ்த்திறன் போட்டிகளிலும் பொதுத்தேர்வுகளிலும் ஜேர்மன் ரீதியான பரிசுகளைப் பெற்றுள்ளேன். இவற்றிற்கு என்னைத் தயார் செய்வதின் மூலம் நான் எனது வாழ்க்கையில் எதிலும் வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோளையும் ஒழுங்கையும் கற்றுள்ளேன். அக்காலகட்டத்தில் தமிழாலயம் சென்று எனது தாய்மொழியைக் கற்பதை நான் எனது கடமையாக எண்ணிய தால் தமிழாலயம் எனது வாழ்க்கையில் ஒரு பகுதியாக அமைந்தது. நான் தமிழாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் தமிழ்மொழியும் சமூகக் கல்வியும் கற்பிக்கப் பட்டன. இரண்டு பாடங்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்துப் படித்திருந்தாலும் சமூகக் கல்வியைக் கற்றதன் மூலம் பல துறைசார்ந்த அறிவைத் தாய்மொழியிற் பெறக் கூடியதாக இருந்தது. இவ்வாறு சமூகக் கல்வி எனக்கு எப்பொழுதும் ஒரு பலமாக இருந்ததே தவிர ஒருபொழுதும் சுமையாக இருந்ததில்லை!

11 ஆம் ஆண்டு வரை தமிழையும் சமூகக் கல்வியையும் தெளிவாகக் கற்றதனாலும் சிறப்பாக சித்தி எய்தியமையாலும் ஆசிரியையாகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது பல இன இயல்புடைய மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் சமாளித்து நடக்கும் மனப் பக்குவத்தைப் பெற்றேன். எனக்குத் தமிழாலயத்தில் கல்வி கற்பித்தல் மன நிறைவைத் தந்தது. ஆயினும் எனது பல்கலைக் கழகப் படிப்பின் காரணமாகத் தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை.

ஆண்டு இரண்டு முதல் ஆண்டு 11 வரை எனக்குத் தமிழ் மொழியையும் சுற்றாடற் கல்வியையும் கற்பித்த அனைத்து ஆசிரியைகள், ஆசிரியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் டியூஸ்பேர்க் தமிழாலயம் இன்னும் மென்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி !

செல்வி அபிராமி தனபாலசிங்கம்
மருத்துவ மாணவி





Hallo, mein Name ist Abiramy Thanapalasingam.

Ich habe am Tamilaalayam Duisburg bis zur 11. Klasse Tamilisch und Sachunterricht gelernt und meinen Abschluss gemacht.

Anschließend war ich auch als Lehrerin in dieser Einrichtung tätig. Hier erzähle ich euch ein bisschen von meiner tamilischen Laufbahn!

Schon seit meinem dritten Lebensjahr lehrte mich meine Mutter Tamilisch, sodass ich 1997 mit sieben Jahren in der tamilischen Schule aufgenommen wurde. Der damalige Rektor der Schule, Herr Pon. Vijayakumar, versetzte mich sofort in die zweite Klasse, da ich bereits Vorkenntnisse hatte und somit hierfür qualifiziert war. Ich war schon von klein auf immer an meiner Muttersprache sehr interessiert und habe mich mit Leidenschaft an meiner tamilischen Bildung beteiligt. Dies hat sich darin widergespiegelt, dass ich sowohl in den jährlichen Abschlussklausuren ( in Tamil und Sachunterricht) als auch in den jährlichen Sprachwettbewerben gute Leistungen erbracht habe, die mehrmalig auf bundesweiter Ebene ausgezeichnet wurden. Mich auf diese jährlichen Abschlussklausuren und Sprach wettbewerbe vorzubereiten, hat mich einen gewissen positiven Leistungsdruck verspüren lassen. Hierdurch habe ich Disziplin und Kampfgeist entwickelt, von denen ich auch jetzt noch profitiere. Somit habe ich an der tamilischen Schule nicht nur meine Muttersprache gelernt, sondern auch - so klischeehaft es auch klingen mag- Werte für das Leben! In all den dreizehn Jahren, in denen ich zehn Jahre Schülerin und schließlich drei Jahre Lehrerin war, ist der samstägige Gang zur tamilischen Schule Routine geworden und diese Bildungsstätte wurde zu einem Teil meines Lebens.

Ich habe den Besuch der tamilischen Schule nie als Last empfunden, sondern als eine Bereicherung angesehen. Mit großem Stolz kann ich sagen, dass ich meine Muttersprache nicht nur sprechen kann, sondern sie in Wort und Schrift beherrsche und darüber hinaus die Literatur und Geschichte, aufgrund des Tamil Unterrichts, kenne! Zudem bin ich, dank des Sachunterrichts, fähig unterschiedliche Terminologien auf meiner eigenen Muttersprache widerzugeben.


Da ich meinen Abschluss mit einer guten Zensur absolviert habe und auch all die Jahre über eine gute Schülerin war, wurde mir empfohlen selbst zu unterrichten.

Das Unterrichten war eine neue Herausforderung für mich. Hierbei wurde ich mit vielen Dingen konfrontiert, die ich flexibel zu lösen hatte. So musste ich sowohl auf die verschiedenen Leistungsebenen und Bedürfnisse der Schüler als auch auf die unterschiedliche Disponiertheit der Eltern eingehen. Insgesamt gesehen kann ich zusammenfassen, dass mir das Unterrichten und vor allem der Lernerfolg meiner Schüler viel Freude bereitet haben. Leider musste ich jedoch, hinsichtlich meines Medizinstudiums, meine Tätigkeit als Lehrerin an der tamilischen Schule traurigen Herzens beenden.

Zum Schluss möchte ich mich bei allen Lehrerinnen und Lehrern, die mich bis zur 11.Klasse unterrichtet haben, bedanken. Darüber hinaus muss gesagt werden, dass ich all das ohne die Unterstützung und den Rückhalt meiner Mutter nicht erreicht hätte!

Ich wünsche dem Thamilalayam Duisburg weiterhin viel Erfolg und ein langes Bestehen!

Ehemalige Schülerin / Lehrerin
Abiramy Thanapalasingam
Medizinstudentin






யுகிஷா சின்னத்தம்பி, சாருஜா சின்னத்தம்பி, அடானா பகீரதன், பதுமினி விஜயகுமார், கிருஷா தேவதாசன்
நடன ஆசிரியை: செல்வி. லக்ஷனா தர்மபாலன்





ராகுல் விஜயசேகரன், நிரோஷி சந்திரகாந்தன், சாருகி சந்திரகாந்தன, மிதுன் மோகனகாந், பாரத் விஜயசேகரன், ஆரபி பகீரதன்
கலை ஆசிரியை: திருமதி. ராமப்ரியா சிவராஜா




## கலைகள்

நான் பழகுவது 64 கலைகளில் ஒன்றாகிய நடனக்கலையாகும். கடந்த ஒரு வருடமாக இக்கலையைப் பயின்று வருகிறேன். இக் கலையானது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவதோடு, உடலிற்கு சிறந்த உடற்பயிற்சியாகவும், ஞாபகசக்தியை அளிப்பதாகவும் இருக்கின்றது. நடனத்தில் பல உருப்படிகள் உண்டு. அவையாவன:- புஸ்பாஞ்சலி, கௌத்தம், தில்லானா, பதம் ஆகும். அப்பியாசப்பயிற்சிக்காக அடவுகள் ஆடப்படுகிறது. பாவம், ராகம், தாளம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இக் கலையின் அழகு என்னவென்றால், நவரசங்களையும் முகத்தில் வெளிக்கொணர்ந்து ஆடுவதாகும்.

அடானா.பகீரதன்
ஆண்டு. 8

# தமிழாலயம் டுயூஸ்பேர்க்
தமிழாலயங்களின் கல்வி, கலை, விளையாட்டு

# Tamilalayam Duisburg
*Bildung, Kultur und Sport*




## வாழ்த்து

நம் தாய்மொழியாம் தமிழ்மொழியை
தாயகம் தாண்டியும் தழைக்க வைத்த
எம் தமிழாலயத்தின் தமிழ்மொழிப் பணி
தொடர என் வாழ்த்துக்கள்.

ஆசிரியை
திருமதி.வி.நந்தகுமார்
டுயூஸ்போர்க்.






ராசிகா ரவிக்குமார்

அஞ்சல் 13-15



ஐதுசா ரூபகாந்தன், அடானா பகீரதன், ரோசிகா ரவிக்குமார், ஜொகானா உதயகுமார்

அஞ்சல் 17-20



சபிசன் சாந்தகுமாரன், ரொபிஷன் ரூபகாந்தன், சர்மிலன் சாந்தகுமாரன், யதுர்சன் யோகரட்ணம்

அஞ்சல் 13-15



நிகேஸ் மகேஸ்வரன், டிலான் பெ.இமானுவேல், வினுசியன் மகேந்திரராஜா, ரினுஜன் ரூபகாந்தன்


# மழலையர்நிலை, பாலர்நிலை
# ஆசிரியை திருமதி. பே.சர்வானந்தன்



கஜத் கணஈசன், அபிஷியாம் ஸ்ரீராம், கிர்த்தனா மனோகரன், சுதேசன் மனோகரன், சாருஜன் தவலோஜன், கவீசன் தவலோஜன், நித்தேஸ் ராஜ்சதீஸ், கரிஸ் சுரேஸ், செலியா வெஸ்ரின், ஆரெவி தர்மேந்திரா, ராகுல் விஜயசேகரன், நித்யா தட்சானந், டோறியா அரிகரநாதன் குயிலினி சசிதரன், தாட்சாயினி சண்முகராஜா, ஷர்மிதா புவனேந்திரன், ஷர்மிதன் புவனேந்திரன், கனிதா புவனேந்திரன், அதீஸ் சுரேஸ், டினோத் பிராங்கிலின், நோவா பிராங்கிலின், தபிதா ஸ்கந்தகுமார், கதிர் லக்ஸ்மணன், ஹரந்தகி பரமேஸ்வரன், லதுஷா உதயணன், அஸ்வின் உதயணன், அவனிகா பிரபாகர், அந்துஜன் ஆனந்தராஜா, ஜெயகரன் குணசேகரன், அக்ஷகன் நேசகுமார், அபிஷா சிவபாலா




# வளர்நிலை 1
## ஆசிரியை திருமதி. பா. சண்முகராஜா



சன்னிதன் சந்திரகுமார், ஜெல்ரன் குணசேகரன், சாருஜா சின்னத்தம்பி, ஆரணன் தர்மேந்திரா, லக்ஷா சுப்ரமணியம், காவியா சுரேஸ், ஹரிசன் அருள்ஆனந்தன், மதுமிதா சுகுமார், கிருஸ்ணன் கிரிதரன், கிருஷியா கிரிதரன்.



## வளர்நிலை 2
## ஆசிரியை செல்வி. அ. பெ.இமானுவேல்



பாரத் விஜயசேகரன், டெலானி மத்தியஸ், ராகவி தர்மேந்திரா, யுகிஷா சின்னத்தம்பி



## வளர்நிலை 3
## ஆசிரியை
## திருமதி. க. இராம்மோகன்

கவிசன் சௌந்தரராஜா,
சனுராஜன் கிருஸ்ணகுமார்,
சனுாகா கிருஸ்ணகுமார்

## வளர்நிலை 4


## ஆசிரியை திருமதி. ஜெ. பெ.இமானுவேல்



டனுசன் இராம்மோகன், ஜெனுஜன் சின்னத்தம்பி, கேதுசன் கருணானந்தன், டானியல் பெ.இமானுவேல், அபிஷேக் நந்தகுமார், மதுசா மதிரூபன், ராசிகா ரவிக்குமார், கார்த்திகாயினி யோகநாதன், டனிலா மத்தியாஸ்

## ஆண்டு 5


## ஆசிரியை செல்வி. ம. விஜயகுமார்



கௌசிகன் சிவகுமார், நிதுர்சன் சிறீஸ்கந்தராஜா, இந்துஜன் சுப்ரமணியம், ஷக்திஜா அருள்ஆனந்தன், வினோஸ் நந்தகுமார், நிகேஸ் மகேஸ்வரன்.

## ஆண்டு 6

## ஆசிரியை திருமதி. பி. பகீரதன்



ஐதுசா ரூபகாந்தன், ரோசிகா ரவிக்குமார், அபிஷன் தயாபரன், ஜினுத் ஜெயராஜா, கிருஷா தேவதாசன், கிஷோக் தேவதாசன்.

## ஆண்டு 7

## ஆசிரியர் செல்வன். சு. சிவபாலா



நிரோசி சந்திரகாந்தன், தர்சிகா முருகன், சாருகி சந்திரகாந்தன், றாகினி சிறிதரன், அனீனன் தேவரவீந்திரன்.

## ஆண்டு 8
## ஆசிரியை திருமதி. த. தனபாலசிங்கம்



றஜிந்தன் சிறிதரன், கனிஸ்ரா கருணானந்தன், அடானா பகீரதன், பதுமினி விஜயகுமார்.

## ஆண்டு 9
## ஆசிரியை திருமதி. வி. நந்தகுமார்



லாவண்யா தர்மகுமார், கௌசிகா சிவகுமார், கௌசிகா இராம்மோகன், சோபிதன் சிறீஸ்கந்தராஜா, டிலான் பெ.இமானுவேல்.

## ஆண்டு 10, ஆண்டு 11
## ஆசிரியை திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம்



ரினுஜன் ரூபகாந்தன், வினுசியன் மகேந்திரராஜா,சபிசன் சாந்தகுமாரன், சுரேக்கா முருகன், சூரியா சௌந்தரராஜா, அபிதரன் தயாபரன், ரொபிஷன் ரூபகாந்தன், யதுர்சன் யோகரட்ணம்

## ஆண்டு 12
## ஆசிரியை திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம்




மகிழினி விஜயகுமார், ஆரபி பகீரதன், அனிற்றா பெ.இமானுவேல்


தமிழ்-ஏலம்
www.tamil-auction.com
எங்களுடன் தொடர்பு கொள்ளவும்
TP: 0049/20669930119 E-Mail: info@tamil-auction.com Skype: www.Tamil-Auction.com


The Yarl Super Market
Altendorfer str.418, 45143 Essen
Tel: 0152 33 59 84 21, Heerstr. 104, 47053 Duisburg
Tel: 0203 / 98406782
த யாழ் சுப்பர் மார்கட் எசன் மற்றும் டியூஸ்பேர்க்
உங்கள் தேவையே எங்கள் சேவை


"Genuss muss nicht teuer sein."
Mini Markt
VTM's
Asiatische, indische, Afrikaninische, Arabische, Lebensmitteln
தரமானபொருட்களுக்கும் , அழகானவாழ்வுக்கும் விரிஎம்ஸ்
எல்லாமே மலிவாக இன்றே விரையுங்கள்!
Wir bieten Ihnen günstige asiatische, afrikanische und arabische Gewürze Kosmetik, Haushaltware, Fisch und Frisches Gemüse und noch vieles mehr
Außerdem sind wir samstags und sonntags auch für Sie da
We invite you to buy your favourite asian and african food and cosmetic products
"Genuss muss nicht teuer sein."
Mini Markt
VTM's
Asiatische, indische, Afrikaninische, Arabische, Lebensmitteln
தரமானபொருட்களுக்கும் , அழகானவாழ்வுக்கும் விரிஎம்ஸ்
எல்லாமே மலிவாக இன்றே விரையுங்கள்!
Neudorferstraße 173
47057 Duisburg
பலசரக்குப் பொருட்கள்
கடலுணவுப் பொருட்கள்
உடன் மீன்வகைகள்
உடன் ஆட்டு இறைச்சிப் பங்கு
உடன் மரக்கறி வகைகள்
குளிர்பான வகைகள்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
துரித் பணமாற்றுச் சேவை
நம்பிக்கை, நாணயம், விலைமலிவுடன்
விலைக் கழிவுகளும் உண்டு!
Tel.: 0203 98418781



தமிழாலயம்
டுயூஸ்பேர்க்
Duisburg